## IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS.No. 150/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மயில்வாகனம் | ஊர் | : | தஞ்சாவூர் |
| க.பெ/த.பெ. | : | மனோகரன் | மாவட்டம் | : | |
| வயது | : | 50 | தொழில் | : | ஓட்டுநர் |

2025ம் ஆண்டு ஜீன் 5-ஆம் நாள் **பி.சா.1ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பி.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1 ஆம் பிரதிவாதி முகவரி யை காட்டக்கூடிய அவரது ஐசிஐசிஐ வங்கி கணக்கு விபரத்தின் Screen shot **பி.வாசா.ஆ.1**.( மேற்படி ஆவணம் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65bயின் கீழ் சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அந்த ஆவணம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மொபைல் போன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு மேற்படி ஆட்சேபணைக்கு உட்பட்டு ஆவணம் குறியிடப்படுகிறது). 1ஆம் பிரதிவாதியின் முகவரியை பிரதிபலிக்ககூடிய அவரது ஓட்டுநர் உரிமத்தின் நகல் **பி.வா.சா.ஆ.2**. எனது குடும்பஅட்டையின் நகல் **பி.வா.சாஆ.3**(அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல் குறியிடப்படுகிறது). எனது ஓட்டுநர் உரிமத்தின் நகல் **பி.வா.சா.ஆ.4** (அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல் குறியிடப்படுகிறது). **நாங்கள் கோவிந்தராஜனுக்கு செலுத்தவேண்டிய தொகை தொடர்பாக என்னால் கைப்பட எழுதப்பட்ட கணக்கு விபரங்கள் அடங்கிய நோட் புத்தகம் பி.வா.சா.ஆ.5** (மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு தேவையற்றது எனவும், இந்திய சாட்சிய சட்டத்தின்படி இந்த ஆவணம் ஆவணமே அல்ல என்றும், எனவே மேற்படி ஆவணத்தை குறியீட வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது). நான் கோவிந்தராஜ் என்பவருக்கு செலுத்தவேண்டிய தொகை குறித்தான எனது தரப்பு கணக்கு பட்டியல் **பி.வா.சா.ஆ.6** (மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு தேவையற்றது எனவும், இந்திய சாட்சிய சட்டத்தின்படி இந்த ஆவணம் ஆவணமே அல்ல என்றும், எனவே மேற்படி ஆவணத்தை குறியீட வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது). 1ஆம் பிரதிவாதிக்கு இந்த வழக்கில் சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையின் நகல் **பி.வா.சா.ஆ.7.** எனக்கு இந்த வழக்கில் சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையின் நகல் **பி.வா.சா.ஆ.8.** இந்த வழக்குடன் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால

மனுவின் 1ஆம் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட அறிவிப்பின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.9.** எனக்கு இந்த வழக்குடன் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுவின் 1ஆம் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட அறிவிப்பின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.10.**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கின் 1ஆம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 வழக்கின் தாவா சொத்திற்கான மூலஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 நானும் என்சகோதரனும் இளவராக இருக்கும்போது என் தாயாரை காப்பாளராக காட்டி கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதுதான் இந்த வழக்கு சொத்திற்கு எங்கள் உரிமையை நிலைநாட்ட கூடிய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ4 இல் காணப்படும் கையொப்பங்கள் எனது மற்றும் எனது சகோதரனுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ4 25.02.2016 அன்று நானும் என் சகோதரனும் பூமிநாதன் என்பவருக்கு எழுதிகொடுக்கப்பட்ட பெந்தக கடன் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி கடன் பத்திரத்தை பொறுத்து கடனை திருப்பி செலுத்தி அடமானத்தை மீட்டதற்கான ரசீதுதான் வா.சா.ஆ.5 என்றால் சரிதான். எனக்கு தினமும் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது சகோதரருக்கு அதுபோல் பழக்கம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கோவிந்தராஜ் என்பவருக்கு கொடுத்த பணம் தொடர்பான விபரங்களை அந்தந்த நாளிலேயே எனது நாட்குறிப்பில் குறித்து வைப்பது வழக்கம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 என்னால் கைப்பட எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். இந்த வழக்கில் அழைப்பாணை சார்வான பின்பு மேற்படி ஆவணத்தை நான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வபோது எழுதப்பட்டது. மேற்படி ஆவணத்தில் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை எழுதப்பட்ட விபரங்கள் ஒரே பேனா மையினால் எழுதப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ5 ஆவணத்தில் பக்கம் 2இல் 10 மாதம் செலுத்திய மொத்த வட்டி ரூ.1,40,000 என எந்த தேதியில் எழுதப்பட்டது என்று தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தேதி குறிப்பிட மறந்துவிட்டேன். பி.வா.சா.ஆ5 ஆவணத்தில் பக்கம் 2இல் பிப்ரவரி மாதம் 2017 ஆம் வருடத்திலிருந்து நான் கேட்டு கொண்டதற்கு கிணங்க மாத வட்டி 4% லிருந்து 3.5 % மாத குறைக்கப்பட்டது என்று எழுதப்பட்ட விபரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தேதி போட மறந்துவிட்டேன். நான் சொல்வதுபோல் அன்றேஅன்றே தினத்திலேயே மேற்படி குறிப்புகள் எழுதப்பட்டிருந்தால் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் மொத்தமாக எழுதிய காரணத்தால் தான் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 4 சதவீத வட்டி என்பது கால் காசு வட்டி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் நான் அதிக வட்டிதான் செலுத்தினேன். அன்றே அன்றேய தினம் கணக்கு எழுதியிருக்கு

பட்சத்தில் மொத்தமாக கூட்டல் போடவேண்டிய அவசியம் இல்லை என்றும், ஒரே நாளில் எழுதப்பட்டது என்பதால் தான் அவ்வாறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.5 எழுதப்பட்ட புத்தகத்தில் பேப்பர்கள் கிழிக்கப்பட்டதற்கான அடையாளம் உள்ளது என்றால் சரிதான், அந்த காகிதங்கள் தேசமடைந்துள்ளதால் அதனை கிழித்தேன். வரவு செலவு கணக்கு எழுதும்போது அவ்வாறு எழுதும் தினத்தில் பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது வழக்கம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5இல் 1வது பக்கத்தில் மட்டும்தான் பிள்ளையார் சுழி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வரவு செலவு கடன் தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு வரவு செலவு கடன் எதுவும் இல்லை. இதற்கு முன்பாக நான் வாங்கிய கடன் தொடர்பாக வரவு செலவு கணக்கு பராமரித்ததற்கான நோட்டினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.5இல் எழுதாத பக்கங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதும், 1ஆம் பிரதிவாதியினுடையதும் தான். என்னுடைய அன்றாட வரவு செலவு விபரங்கள் 1ஆம் பிரதிவாதிக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 இல் அதில் செலுத்தப்பட்டதாக சொல்லும் தொகையை நான் செலுத்தினேனா, 1ஆம் பிரதிவாதி செலுத்தினாரா என்ற விபரம் காணப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 இல் காணப்படும் கையொப்பங்கள் அன்றன்றயே தேதியில் போடபபட்டதா என்றால் இல்லை, இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோது போடப்பட்டது. பி.வா.சா.ஆ.5 இல் செலுத்தப்பட்ட தொகை விபரங்கள் தொடர்பாக 1ஆம் பிரதிவாதிக்கு நேரடியாக தெரியுமா என்றால் நான் போனில் சொல்லி அதன்மூலம் தெரியும். என்னுடைய தனிபட்ட வரவு செலவு கணக்கு எனது சகோதரர் எதற்காக கையொப்பம் இட்டார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது அவர் கையொப்பம் இட்டார். பி.வா.சா.ஆ.5 அன்றன்றயே தேதியில் செலுத்தியதற்காக சொல்லப்படும் தொகைக்காக பராமரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் பராமரித்து வரும் நாட்குறிப்பேட்டில் உள்ள விபரங்களை பி.வா.சா.ஆ.5 டன் ஒப்பிட்டு பார்த்தால் அதில் உள்ள விபரங்கள் உண்மையா, பொய்யா என்று தெரிய வரும் என்றால் எனக்கு டைரி எழுதும் பழக்கம் உள்ளது, தற்போது அந்த டைரியை எங்கு வைத்தேன் என்று ஞாபகம் இல்லை. சமீப காலமாக நான் நாட்குறிப்பேடு எழுதவில்லை. .வா.சா.ஆ.6 எண் 1 இணைபாதிவாளார், தஞ்சாவூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதும் 1ஆம் பிரதிவாதியுடையது என்றால் சரிதான். அந்த பத்திரத்திற்கான பத்திர காகிதங்கள் 1 ஆம் பிரதிவாதி பெயரில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பத்திர பதிவிற்காக 1ஆம் பிரதிவாதிதான் தாக்கல் செய்துள்ளார் என்று அந்த ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான், அதை பற்றி ஞாபகம் இல்லை. கூடுதல் முத்திரை கட்டணமாக ரூ.10150 எனது சகோதரரால் செலுத்தப்பட்டதாக குறிப்பு உள்ளதா

என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்ட எனக்கு அறிமுகமான கணேசன் அந்த ஆவணத்தில் 1வது சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் இணைக்கப்பட்ட எனது மற்றும் 1ஆம் பிரதிவாதியின் அடையாளத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எங்களால் கொடுக்கப்பட்டதுதான். மேற்படி பத்திரத்தில் சார்பதிவாளர் மூல ஆவணங்களை சரிபார்த்ததாக குறிப்பிடப்பட்ட பதிவு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி ஆவணத்தில் 100க்கு 1.50 ரூபாய் வட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. வீட்டுக்கான அசல் ஆவணங்களை வாதியிடம் ஒப்படைத்த பின்பு அதற்கான ஜெராக்ஸ் நகல்கள் என்வசம் இருந்தது என்றால் சரிதான். ஒரு சொத்தை பொறுத்து யார் வேண்டுமானாலும் வில்லங்க சான்று மற்றும் ஆவணங்களில் நகல்களை பெற்று பார்க்கமுடியும் என்றால் சரிதான். சமீபகாலமாக தான் தெரிந்துகொண்டேன் அதற்கு முன்பு தெரியாது. இந்தவ ழக்கு வாதி தாக்கல் செய்வதற்கு முன்பு வரை மோசடியாக எங்களிடம் ஆவணம் எழுதி பெறப்பட்டது என்று எந்த புகாரும் காவல்த்துறையில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை பதிவு செய்வதற்கு தாக்கல் செய்தபோது எங்களை புகைப்படம் எடுத்து அந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட பின்பு மேற்படி ஆவணத்தை பொறுத்து மோசடியாக எழுதி பெறப்பட்டதாக எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் அந்த நடைமுறை குறித்து எனக்கு தெரியாது. அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட பின்பு அவ்வாறு மோசடியாக பெறப்பட்ட ஆவணம் தொடர்பாக எந்த மேல் நடவடிக்கை எடுக்கலாம் குறித்து எனது நண்பர்களிடம் ஆலோசித்தேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் இட்ட கணேசனிடம் ஆலோசித்தேனா என்றால் அவர்தான் என்னை வற்புறுத்தி கையொப்பம் இடச்செய்தார். இந்த விபரத்தை நான் எதிர்வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளின்படி மேலும் குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.